# தமிழர்களின் பண்பாட்டு நெறிகள்

***சா. ஜா. கீதாரஞ்சிதபாக்கியம்***
பதிவு எண்: 19221284022021
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம்
தூயசவேரியார் கல்லூரி, திருநெல்வேலி

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5044

***ஆய்வுச் சுருக்கம்***

*தமிழர் வாழ்வு பண்பாட்டு நெறிகளோடு இணைந்தவை. நம் நாட்டில் வசிக்கும் தமிழர்கள் மட்டுமில்லாது வெளிநாடுகளில் வசிக்கும் தமிழக வாழ்விலும் நம் தமிழர் பண்பாட்டு நெறிகள் மிளிர்கின்றன. நாம் இன்று கடைபிடித்துக் கொண்டிருக்கும் பண்பாட்டு நெறிகள் தமிழிலக்கியங்களின் வழி அறிந்தவையே. மக்களின் மதிப்புறு நடவடிக்கைகளைக் குறிப்பது பண்பாடாகும். "கலாச்சாரம்" என்னும் சொல்லானது சமஸ்கிருத சொல்லாகும், "பண்பாடு" என்பது தான் தூய தமிழ்சொல்லாகும். இந்த இரண்டு சொற்களின் பொருளும் ஒன்று தான். இன்றளவிலும் பல வரலாற்றுச்சுவடுகள் தமிழர் பண்பாட்டு அடையாளங்களாகத் திகழ்கின்றன. வந்தாரை வாழ வைப்பது, இல்லை என வருவோர்க்கு இல்லை என்னாது ஈகை செய்வது, நட்பு பாராட்டுதல், திருமணம், சடங்குகள், ஓவியம், சிற்பம், கலைகள் என ஒவ்வொன்றும் தமிழக மக்களின் வாழ்வியல் செயல்பாடுகளாகத் திகழ்கின்றன. கடையேழு வள்ளல்கள், சேர, சோழ, பாண்டிய மன்னர்கள், மாமல்லபுரச் சிற்பங்கள், தஞ்சை பெரிய கோயில், திருவிழாக்கள், சமய நம்பிக்கைகள், நடனம், இசை,திருமணச் சடங்குகள் இவை அனைத்தும் தமிழருக்கே உரியன. தமிழர்களின் பெருமையைப் பறைச்சாற்றுபவையாக உள்ளன. நம் பண்பாடுகளில் தலைச்சிறந்து விளங்கும் விருந்தோம்பல், அறச்செயல் புரிதல், வீர உணர்ச்சி பற்றியும், பண்பாட்டின் விளக்கம் பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்.*

***கலைச் சொற்கள்:*** *பண்பாடு, விருந்தோம்பல், கலாச்சாரம், விருந்தினர், வீரம், உறவுகள், ஈகை, திருவிழாக்கள், பண்டிகைகள்*

## முன்னுரை

**"தமிழன் என்றோர் இனமுண்டு தனியே**
**அவற்கொரு குணமுண்டு"**

என்று தமிழரை அடையாளப்படுத்தினார் நாமக்கல் கவிஞர். தமிழருக்கே உரிய சில அடிப்படை பண்புகளைப் பண்பாடு என்பர். மற்ற இனத்தினரிடையே காணப்படாத ஒழுக்கப்பாடுகளை நம் தமிழினம் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தும், தெரியப்படுத்தியும் உள்ளது. காரணம் மனித இனம் எப்படி வாழ வேண்டும் என்பதை விட எப்படி வாழக் கூடாது என்று வாழ்வியல் நெறிபாடுகளைக் கற்றுத் தந்துள்ளது. நல்ல எண்ணங்களும், மேம்பட்ட சிந்தனைகளும் நாம் வாழும் சமுதாயத்தைப் பண்பட்ட சிகரமாக மாற்றமடையச் செய்கின்றன.

**பண்பாடு விளக்கம்**

"பாடறிந்து ஒழுகும் பண்பினாரே" என்பது புறநானூற்றுப் பாடலின் அடி. அதாவது உலக ஒழுக்கம் அறிந்து நடத்தலே பண்பினர் ஆவர் என்பதாகும். "பண்" என்னும் சொல்லிற்குத் "தகுதி" என்ற பொருளும் பாடு என்னும் சொல்லிற்கு உலக ஒழுக்கம் என்ற பொருளும் உண்டு. தகுதியான உலக ஒழுக்கப் பண்புகளைக் கடைபிடித்து வாழ வேண்டும் என்பதாகும்.

நிலத்தில் வாழும் மக்களின் மனதை பண்பட்டதாக மாற்றும் உயர்ந்த எண்ணம், அன்பு, மனிதநேயம், வாய்மை என மேலும் பல நற்பண்புகளை பண்பாடு என்பர். பண்பாடு என்பதன் ஆங்கில சொல் "CULTURE" என்பதாகும். அதே போல் கல்லும் முள்ளும் நிறைந்த நிலத்தை பண்பட்ட நிலமாக மாற்றக்கூடிய உழுதல், விதைத்தல், நீர்பாய்ச்சுதல், உரமிடுதல், களையெடுத்தல் போன்ற செயல்கள் "AGRICULTURE" என்று கூறுவர்.

பண்பாடு என்பது மக்கள் வாழ்வியலின் ஒவ்வொரு செயல்பாட்டின் அடிப்படைக் கூறுகள் காலங்காலமாக பின்பற்றி வரும் தன்மை ஆகும்.

**தமிழரின் அடிப்படை பண்புகள்**

தமிழ் கலாச்சாரம், தமிழ் மக்களின் பண்பாட்டு கருவுலமாகத் திகழ்கிறது. சங்க கால கடையெழு வள்ளல்களின் ஈகைச் சிறப்பு பெரும் வியப்பை ஏற்படுத்த கூடியது. வரலாற்று காலத்தில் புலியை முறத்தால் அடித்து விரட்டிய தமிழச்சியைப் பெற்றது நம் தமிழர் மரபு.

**"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு"[1]**

விருந்தினரை வரவேற்று உணவிடுதலே இல்லறத்தான் கடமை என்று வள்ளுவம் எடுத்துரைக்கிறது.

நம் முன்னோர்கள் சமய நல்லிணக்கத்தை கடைபிடித்து வாழ்ந்தனர். அதனால் நான் நம்நாட்டிற்கு புத்த, பௌத்த, சமண, கிறிஸ்தவ என பல மதத்தினர் நம் நாட்டிற்கு வருகை புரிந்துள்ளனர். அதன்மூலம் அவர்கள் பரப்பிய சமயங்களின் வாயிலாக பல்வேறு சமயக்கோவில்கள் நம் தமிழகத்தில் அமைக்கப்பட்டன.

ஒற்றுமைக்கு உதாரணமாக விளங்குபவர்கள் நம் தமிழர்கள். ஆகையால் தான் இன்றும் நம் இளைஞர்கள் நடத்திய சல்லிக்கட்டு போரட்டத்தில் நம் நாட்டினரை மட்டுமல்லாது வெளிநாட்டில் வசிக்கும் தமிழர்களையும் வலையொலி காட்சிகள் மூலம்கலந்துகொண்டுநாங்கள்கடல்கடந்து பல்வேறு தேசங்களுக்குப் சென்றாலும் ஒற்றுமை கரம் கொடுப்போம் என அங்கிருந்து முழக்கமிட்டனர்.

அன்பு, நோன்பு, தொண்டுள்ளம், பரந்துபட்ட மனம், நட்பு பாராட்டல் என எண்ணிலடங்காத பண்பாட்டு மாண்புகளைப் பெற்றவர்கள் நம் தமிழர்கள்.

**விருந்தோம்பல்**

**"மாடில்லான் வாழ்வு, மதியில்லான் வாணிப,**
**நன்**
**நாடில்லான் செங்கோல் நடத்துவதும் – சூடும்**
**குருவில்லா வித்தை, குணமில்லாப் பெண்டு,**
**விருந்தில்லா வீடு வீழல்"[2]**

செல்வமில்லாதவனுடைய வாழ்க்கையும் மதிநுட்பமில்லாதவனுடைய வாணிபமும் நல்ல நாடில்லாதவனுடைய செங்கோலும், நல்ல ஆசிரியரில்லாத கல்வியும், நல்ல குணமில்லாத பெண்களும், விருந்தினரில்லாத வீடும் வீண் அதாவது பயனற்றது என்பதாகும்.

ஒருவர் நம் வீட்டிற்கு வருவதும் அவர்களை சிறந்த முறையில் உபசரித்து விருந்தளித்தலும் வேண்டும் என்று ஔவையார் இப்பாடலின் மூலம் எடுத் தியம்புகிறார்.

திருவிழாக்கள், பண்டிகைகள், திருமண நிகழ்ச்சிகள் இன்னும் பல சுபநிகழ்ச்சிகளின் பொழுது விருந்தோம்பல் நடைபெறும். நண்பர்கள், உறவினர்கள், முன்பின் தெரியாதவர்கள் என பலர் நம் வீட்டிற்கு வந்தாலும் இன்முகத்தோடு உணவு பறிமாறுதல் நம் தமிழர் பண்பாடுகளில் தலையாய பண்பாகும்.

**விருந்தோம்பல் முறைகள்**

வீட்டிற்கு வந்த விருந்தினரை தக்க முறையில் சிறப்பு செய்தல் வேண்டும். தனிப்பாடல் ஒன்று விருந்தோம்பலின் ஒன்பது முறைகளை எடுத்தியம்புகிறது.

**“விருந்தினனாக ஒருவன் வந்து
ஏதிரின்
வியத்த, நன்மொழி இனிது
உரைத்தல்,
திருந்துற நோக்கல், வருக என
உரைத்தல்,
எழுதல். முன் மகிழ்வன செப்பல்,
பொருந்து மற்று அவன் தன்
அருகுற இருத்தல்,
போம் எனில் பின் செல்லதாதல்,
பரிந்து நன்முகன் வழங்கல்”[3]**

மேற்கூறிய பாடல்வரி உணர்த்தும் பொருளானது வீட்டிற்கு வந்த விருந்தினரை இன்முகத்தோடு எதிர்கொண்டு அழைத்தல், இனிய சொற்கள் கூறல், அன்புடன் நோக்கல், வருக என்று வரவேற்றல், எழுந்து நிற்றல், மகிழுமாறு சில செய்திகள் கூறல், பொருந்தும் வகையில் அவர் அருகில் அமர்தல், அவரைப் பின் தொடர்ந்து வழியனுப்பி வைத்தல், பல்வகை உணவு, பழம், வெற்றிலை, பாக்கு முதலியன அளித்தல் போன்றதாகும்.

தனிப்பாடலில் கூறப்பட்டுள்ள விருந்தோம்பல் முறைகளை ஆராயும் பொழுது அன்பு பாராட்டல், பணிவுடன் நடத்தல், ஒழுக்கம், நட்பு பாராட்டல், மகிழ்ச்சி, நலன் விசாரித்தல் போன்ற பண்புநலன்களும் அடங்கியுள்ளது. இதுவே நம் தமிழர் பண்பாடுகளில் தலையாயப் பண்பாடாகவும் கருதலாம்.

**அறச்செயல் புரிதல்**

**“அறமெனப் படுவது யாதெனக்
கேட்பின் மறவா திதுகேள் மன்னுயிர்க்
கெல்லாம் உண்டியும் உடையும்
உறையுளும் அல்லது கண்டதில்”[4]**

சங்கம் மருவிய காலத்தில் எழுதப்பட்ட நூல் மணிமேகலை. இதில் அறம் என்றால் உண்டி, உடை, உறையுள் இல்லார்க்கு வழங்கல் வேண்டும் என்று கூறுகிறது.

கள்ளுண்ணாமை, கொல்லாமை, மது அருந்தாமை இவற்றை வாழ்வில் கடைபிடித்து நடக்க வேண்டும். இவ்வுலகில் இளமை, உடம்பு, செல்வம் இவையாவும் நிலையானது இல்லை. நாம் இப்பிறவியில் புரியும் அறச்செயல்களே நிலையானவை. நமக்கு என்றும் துணையாக வருவதும் அச்செயல்களே என்பதை வலியுறுத்துகிறது மணிமேகலை.

**“இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெரும் செல்வமும் நில்லா
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்
மிக்கஅறமே
விழுத்துணை ஆவது தானம் செய்”[5]**

சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், ஆத்திச்சூடி, திருக்குறள், புராணக் கதைகள் இவை யாவுமே மனிதனாக பிறந்தவர்கள் வாழ்வில் பின்பற்ற வேண்டிய அறச்செயல்களைக் குறிப்பிட்டுள்ளது.

மனிதநேயம் என்று அழைக்கப்படும் அன்பு, பிறர் நலன் பேணல், வாய்மை, விட்டுக்கொடுத்தல், பொறுமை, பிறருக்கு

உதவுதல் என்பதாகும். இத்தகைய அறச்செயல்கள் அனைத்தும் ஆறறிவு படைத்த மனித இனம் வெளிப்படுத்தும் சிறப்புகளேயாகும்.

இம்மண்ணில் பிறந்தது முதல் இறக்கும் வரை நாம் வாழும் வாழ்க்கை அர்த்தமுடையதாக இருத்தல் வேண்டும். அவ்வாறு வாழ மனித இனம் தனக்குள் உருவாக்கிக் கொள்ளும் நெறிகள், நன்னடத்தைகள் செய்யக் கூடியவை, செய்யக்கூடாதவை, செய்தே ஆக வேண்டியவை இவையெல்லாம் அடங்கிய ஒருவழிகாட்டி தொகுப்பாகும்.

மு.வரதராசனார் குறிப்பிடுவது போல் சினம், ஆசை, பொறாமை, கடுஞ்சொல் ஆகிய இந்த நான்கு குற்றங்களுக்கும் இடங்கொடுக்காமல் வாழ்வதே அறமாகும்.

இதனையே வள்ளுவப் பெருந்தகையும் தன் குறளின் மூலம் சுட்டிக்காட்டியுள்ளார்.

***“அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்***
***இழுக்கா இயன்றது அறம்”[6]***

மனம், மொழி, மெய் இவற்றின் பிறப்பிடமே அறச்செயல்கள். நல்ல எண்ணங்கள், இனிய சொற்கள், நல்ல செயல்கள் இவையே அறச்செயல்களின் எழுச்சியாக உள்ளன.

**வீரம்**

வீரம் விளைந்த மண்ணில் தானடா நானும் பிறந்தேன் என மார் தட்டிக் கொள்ளும் வீரத்தமிழுக்குப் பலர் பிறந்த மண் நம் தமிழ் மண். தமிழர் பண்பாடுகளில் வீரம் முக்கியப் பங்கு பெற்றுள்ளது. சுதந்திர போராட்டக் களத்தில் ஆண்கள் மட்டுமில்லாது பெண் விடுதலை வேட்கையாளர்களும் கலந்து கொண்டுள்ளனர். இக்கருத்தை

***“வீரவாள் ஏந்தி வெற்றிமுரசு***
***கொட்டியவள் - ஜான்சிராணி***
***வெள்ளையனை வெளியேற்ற***
***வீர முழக்கமிட்டவள்” - வேலுநாச்சியார்***

வேலுநாச்சியார் கூற்று உறுதி செய்கிறது.

**பொன்முடியார் கூற்று**

பண்டைய தமிழர்களின் வீர உணர்வுகளை உறவுகளின் அடிப்படையில் கடமைகளாக்கிக் குறிப்பிட்டுள்ளார் பொன்முடியார்.

***“பிள்ளையைப் பெற்று வளர்ப்பது தாயின் கடமை,***
***சீலனாக்குதல் தந்தைக்குக் கடமை, வாள் எடுத்து***
***வீசி வலிய யானையைக் கொன்று வருதல்***
***அப்பிள்ளையின் கடமை”[7]***

என பாடியுள்ளார்.

**புறநானூற்றுச் சான்றுகள்**

வீரத்தாய் ஒருத்தி போருக்கு சென்ற தன் மகன் போர்களத்தில் மார்பில் காயம் பட்டு இறந்துவிட்டான் எனக் கேட்ட பொழுது தன் மகனை பெற்றெடுத்த சமயம் அடைந்த மகிழ்ச்சியை விட பெரும் மகிழ்ச்சி அடைந்ததாக கூறுகின்றாள்.

***“நரம்பு எழுந்து உலறிய நிரம்பா மென்தோள்***
***முளரி மருங்கின், முதியோர்சிறுவன்***
***படை அழிந்து, மாறினன் என்று பலர் கூற,***
***மண்டு அமர்க்கு உடைந்தனன் ஆயின், உண்டஎன்***
***முலை அறுத்திடுவேன் யான் எனச் சினை,***
***கொண்ட வாளோடு படு பிணம் பெயரா***
***செங்களம் துழவுவோள் சிதைந்து வேறு ஆகிய***
***படு மகன் கிடக்கை காணூஉ***
***ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனனே”[8]***

இப்புறநானூற்றுப் பாடல், வயது முதிர்ந்த ஒரு தாயின் மகன் போர் புரியச் சென்றான். அவன் போரில் வெற்றி பெற்று

வருவான் என எண்ணிக் காத்திருந்தாள் அவன் தாய்.

ஒரு நாள் அவளிடம் சிலர் உன் மகன் பகைவருக்குப் புறங்கொடுத்து ஓடினான் என்று சொல்லக்கேட்ட அத்தாய் கோபமுற்று எழுந்து ஓர் வாளை எடுத்துக் கொண்டு போர்க் களத்தை நோக்கிப் புறப்பட்டாள். என்மகன் பேடியாய்ப் புறங்காட்டி ஓடியது உண்மையாயின் அவனுக்குப் பாலூட்டிய மார்பை இவ்வாளால் அறுத்திடுவேன்என்று கூறினாள். போர்க்களத்தில் பிணங்களோடு தலைவேறு, உடல் வேறாய் கிடந்த தன் மைந்தனைக் கண்டாள். அவனைச் சேர்த்தெடுத்து அணைத்து ஆனந்தம் கொண்டாள். தன் மகனை பெற்றபோது அடைந்த இன்பத்திலும் அவன் விழுப்புண் பட்டு கிடந்ததைப் பார்த்தவுடன் பேரானந்தம் கொண்டாள் எனப் பொருளுரைக்கிறது.

தமிழர்களின் விளையாட்டுக் கலைகளிலும் வீரம் அடங்கியுள்ளது. சிலம்பாட்டம், மற்போரிடல், சல்லிக்கட்டு, பளு தூக் குதல், வாள் சண்டை, ஈட்டி எறிதல், இவ்விளையாட்டுகளில் வீர உணர்ச்சிகள் வெளிப்பட்டன.

மனிதர்களிடையே மட்டுமல்லாது மிருகங்களைக் கொண்டும் பல வீர விளையாட்டுகள் விளையாடப்பட்டன. யானைப்போர், சேவல் சண்டை, கிடாச் சண்டை, எருது சண்டை என பல விளையாட்டுகளில் தமிழர்கள் ஈடுபாடு கொண்டிருந்தனர்.

இவ்வாறாக தமிழர் பண்பாடுகளில் வீரம் பெண்களிடமும், ஆடவர்களிடமும், மிருகங்களிடமும் காணப்பட்டது. நம்முடைய முன்னோர்களின் வீரமரபில் பிறந்த நம் மனதிலும் வீர உணர்வு துளிர்விட்டு விருட்சமாக வளரவேண்டும். நம் தமிழுக்கும், தமிழ் இனத்திற்கும் இடையுறு செய்யும் செயல்களான அடிமைத்தனம், அன்னிய மோகம் இவற்றை அறுத்தெரிய வேண்டும்.

**முடிவுரை**

அந்நிய மோகத்தில் நம் தமிழர் பண்பாடு களை அடகு வைக்காமல் பாதுகாக்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமை. நம் முன்னோர்களின் பண்பாட்டு நெறிகளை நாமும் பின்பற்றி நம் சந்ததியினருக்கும் கற்று கொடுக்க வேண்டும். தமிழர் பண்பாடுகளின் வழி பிறந்தவையே இன்று நாம் கற்றுக் கொண்டிருக்கும் இலக்கியங்கள். அவ்விலக்கியங்களைக் கற்றால் மட்டும் போதாது அதன் வழி நிற்றலும் வேண்டும். அயல்நாட்டினருக்குப் பண்பாடுகளைக் கற்றுக் கொடுத்த நம் தமிழினம் வாழ்க! வளர்க!

**பார்வை நூல்கள்**

1. திருக்குறள், பரிமேலழகர் (உ.ஆ), பா.எ.81. ப.39
2. அவ்வையார் தனிபாடல்கள் பாடல்கள், புலியுர் கேசிகன் உரை பா.எ.66
3. விவேகசிந்தாமணி, காசிகாண்டம் பொருண்மை, பா.3
4. மணிமேகலை, புலியுர் கேசிகன் உரை பா.எ.25
5. மேலது. பா.எண். 135
6. பரிமேலழகர், முன்கூறிய நூல்இ ப.எண். 21
7. புறநானூறு, பா.எ.303, ப.665
8. மேலது, பா.எ.278, ப.622